[2013 அக்டோபர் 24

32. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி.ஜே.2) துறையின் 26-7-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 130-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

33. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம். எண் 2/2013.)

2. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் (சீர்திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2013.)

3. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்க அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2013.)

* * * * *

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS